RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt21s224

OPEN ACCESS

# மூவர் தேவாரத்தில் இறைநெறிக் கொள்கைகளும் கோட்பாடுகளும்

இரா. கோட்டீஸ்வரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, இராணி மேரிக் கல்லூரி, சென்னை-600004, இந்தியா

# The Three Tevaram theories and principles of God

R. Kodeeswari [a, *]

[a] Department of Tamil, Queen Mary's College, Chennai-600004, Tamil Nadu, India.

* Corresponding Author: kottesswari.ramasamy@gmail.com

Received: 04-11-2020
Revised: 18-02-2021
Accepted: 21-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

The Thirumurai are specially in Tamil literature, especially in bhakti literature. The first seven of them are called thevaram. The authors of these books are called the Principal Nayanmars. He is the first to be born in The Hawks. During the 6th century jainism, the temples visited the saivism and sang the saivite saints in Tamil Nadu. The devara songs sung in the same way are the ways of worshipping God, the principles of life, the principles and theories of gods. The three principles are that the deity can be attained by singing the devara and worshipping Lord Shiva. The saints of those days thought that the best way to guide people through devotion was to guide them.

**Keywords:** Thirumurai, Jainism, Worship, Lord Shiva

## முன்னுரை

உலகம் தோன்றியது முதல் மனித வாழ்க்கை நிலையற்றது என்பதை உணர்ந்த மனிதன் தனக்கும் மேலான சக்தி உண்டு என நம்பத் துவங்கினான். அந்த படிமத்தை இறைவன் எனப் பெயரிட்டு வணங்கலானான். முதலில் இயற்கையை வழிபடத் தொடங்கியவர்கள் பின்னர் உருவம் கொடுத்தனர். அவற்றின் அடிப்படையில் மதங்களை உருவாக்கினர். மதங்களைக் காக்க குருமார்கள் தோன்றினர். அவ்வாறு தமிழகத்தில் தோன்றியவர்கள் நாயன்மார்கள், ஆழ்வார்கள் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் முறையே சைவம், வைணவம் என போற்றி வளர்த்துள்ளனர். நாயன்மார்கள் எனப்படும் சைவக் குறவர்கள் 63 ஆவர். இவர்களில் முதலில் தோன்றியவர் திருஞானசம்பந்தர். இவரைத் தொடர்ந்து திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் ஆவார். இவர்கள் கோயில்கள் பலச் சென்று இறைவனாகிய சிவபெருமானை விளித்தும் புகழ்ந்தும் பாடியுள்ளனர் இவ்வாறு இவர்கள் பாடிய பாடல்கள் பிற்காலத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. அவ்வாறு தொகுக்கப்பட்ட பதிகங்கள் தேவாரப் பதிகங்கள் எனப்படுகின்றன. இவை சைவ சமய முதன்மை நூலான பன்னிரு திருமுறையில் முதல் ஏழு திருமுறைகளாகும்.

"மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரஞ்செய்த திருப்பாட்டும்" (ப. 34 - பன்னிரு திருமுறை வரலாறு)

என்று ஏகாம்பரநாதருலாவில் இரட்டைப்புலவர்களால் மூவர் திருப்பதிகங்கள் தேவாரம் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் சைவ எல்லப்ப நாவலர் என்பவரும் மூவர் திருப்பதிகங்களைத் தேவாரம் என அழைத்தார் என்று கூறுகின்றனர்.

## திருஞான சம்பந்தரின் இறைக் கொள்கைகள்

கொள்கை என்பது தனக்காக வகுத்துக் கொள்ளும் நியதியாகும் இவ்வாறு இறைவன்மீது பற்றுக்கொண்ட திருஞானசம்பந்தர் தான் வழிபடும் சிவபெருமான்மீது மிகுந்த பக்தி காரணமாக அதற்கான கொள்கைகளை வகுத்துக் கொண்டுள்ளார். இறைவனை நாம் உணர்ந்து அவனிடத்தில் செல்வதற்கான பாதை "பக்தி" என்கிறார். "யாவும் அவனே" என்ற நிலையில் இறைவனை வணங்கும் போது ஒருவகை அச்சம் எழும் அந்நிலையில் நாம் வணங்கும் இறைவனை மறந்தால் தண்டிப்பார் என்ற பயத்துடன் வரும் பக்தியை தவிர்க்க வேண்டும். இதனை தவிர்த்து இறைவன்மீது 'காதல்' கொண்டு வழிபட்டால் ஒரு நெருக்கமான உறவாக தோன்றுவார் இதுவே இறைவனை அடையச் சிறந்த வழி என்றும் தம் இறைநெறிக் கொள்கையாகவும் கூறுகிறார்.

அன்பின் வெளிப்பாட்டால் நன்றியும் நட்பும் வளரும் என்பார்கள். எனினும் எண்வகை அன்பிற்கும் எல்லையுண்டு. அன்பே எல்லை மீறினால் தடம் மாறும் என்பதால் இறைவன்மீது வைத்த அன்பைச் சரியான விதத்தில் செலுத்துவதற்காக கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. கோயிலுக்குச் சென்று இறைவனின் நாமத்தைச் சொல்லுதல், இறையுருவங்களைக் கண்ணாரக் கண்டு வணங்குதல், விரதம் இருத்தல், இறைவனுக்குரிய மலர் கொய்தல், கோயிலைச் சுத்தம் செய்தல் முதலான தொண்டுகளில் ஈடுபடுதல், சிறிது நேரம் கண்மூடி அமர்ந்து இறையுருவினை நினைத்து உருகுதல், வாயார மனமுருகிப் பாடல்கள் பாடுதல் என பலவகைகளில் இறைவன்மீதான அன்பை நாம் வெளிப்படுத்தலாம். எனவே இறைப்பற்றால் வாழ்க்கை நல்வழியில் சென்று வீடுபேற்றினை அடையலாம் என்பதைச் சம்பந்தர்

"வீடும் ஞானமும் வேண்டுதிரேல் விரதங்களால்
வாடின் ஞானமென்னாவது மெந்தை வலஞ்சுழி
நூடி ஞானசம்பந்தன் செந்தமிழ் கொண்டிசை
பாடு ஞான வல்லாரடி சேர்வது ஞானமே" (2-2-11)

என்ற பாடல் வரிகளால் அறியலாம்

## கோட்பாடுகள்

1. இயற்கைக் காட்சிகள்
2. சமுதாய நெறிகள்
3. தமிழியல் கோட்பாடுகள்
4. தலங்கள் பற்றிய சிறப்புச் செய்திகள்
5. திருவிழாக்கள்
6. புராணச் செய்திகள்
7. மரம் பறவை மற்றும் விலங்குகள்
8. வாழ்க்கைத் தத்துவங்கள்
9. வாழ வேண்டிய நெறிமுறைகள்

என்பன போன்ற கருத்துக்களை உள்ளடக்கி சம்பந்தர் தனக்கான கொள்கைகளை வகுத்துக் கொண்டு இறைநெறிக் கோட்பாடுகளாக தேவாரப் பாடல்களைப் பாடியுள்ளார்.

## திருநாவுக்கரசர் தேவாரத்தில் இறைநெறிக் கொள்கைகளும் கோட்பாடுகளும்

நாயன்மார்களில் இரண்டாமவர். திருஞானசம்பந்தரால் அப்பர் என அழைக்கப்பட்டவர். பன்னிரு திருமுறைகளில் 4, 5, 6 ஆகிய திருமுறைகளைப் பாடியுள்ளார்.

"சிவனெனும் ஓசை யல்ல தறையோ வுலகில்

திருநின்ற செம்மையுளதே"

என்று தான் சிவன் மீது கொண்டுள்ள பற்றை வெளிப்படுத்தியுள்ளார்.

"காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக

வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக

நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்

பூசனை யீசனார்க்குப் போற்றிவிக் காட்டினோமே (4-76-4)

என்றப் பாடலின் கருத்துக்கேற்ப மனித மனம், உடல், சொல் ஆகியவற்றையே இறைவனை வணங்குவதற்கு பூசைப் பொருள்களாக குறிப்பிடுகிறார். இவற்றையாக தூய்மையாக வைத்து வழிபடுவதே இறைக் கோட்பாடாக தன் தேவாரப் பாடலில் கூறியுள்ளார்.

"மலையே வந்து வீழினும் மனிதர்காள்

நிலையி னின்றும் கலங்கப் பெறுதிரேல்

தலைவனாகிய ஈசன் தமர்களைக்

கொலைசெய் யானைதான் கொன்றிருக்குமே"

என்ற திருப்பாடலில் தன்னைக் கொல்லுவதற்காக சமணர்களால் ஏவப்பட்ட மதயானை கொல்லாது மீண்ட திருநாவுக்கரசர் எல்லாவுலகிற்கும் தலைவனாகிய சிவபெருமானை வணங்கும் அடியவர்களை மதயானையாலும் கொல்ல முடியாது. சூpவன் வணங்குவோரை துன்பம் எளிதில் நெருங்காது என்று கூறியுள்ளார்.

கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்

நற்றுணை யாவது நமச்சிவாயவே"

என்று "சொற்றுணை வேதியன்" என தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகத்தில் சமணர்கள் கல்லோடு பிணித்துக் கடலில் தள்ளியபோது தனக்கு ஈசனே துணைநின்று காத்தார் என தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். 'நமச்சிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திரமே அனைவரையும் காக்கும் என்பதே திருநாவுக்கரசர் இறைக்கொள்கையாகவும் கோட்பாடாகவும் கூறியுள்ளார்.

## சுந்தரர் தேவாரக் இறைக்கோட்பாடுகள்

தேவாரத்தில் ஏழாவது திருமுறையாக நூறு பதிகங்கள் உள்ளன. திருஞானசம்பந்தரிடமும், திருநாவுக்கரரிடமும் சுந்தர்க்குப் பெருமதிப்பு உண்டு. சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய தேவாரத்தில் இவருடைய திருமுறைகள் பெரியபுராணத்துக்கு மூலமாக இருந்ததுள்ளது. இயற்கைச் சூழலை அழகாக வர்ணிப்பவை. தனக்குத் தேவையானவற்றைச் சிவனிடம் உரிமையோடு கேட்பது இவரது வழக்கம். துறவும், உலக வாழ்க்கை வெறுப்பதும் இவரது பாடல்களில் அரிதாகும்.

சுந்தரர் பாடிய தேவாரத்தில் ஒரு சிறுபகுதி திருத்தொண்டர்தொகையாகும். தொண்டர் சிவனை வழிபடும் அடியவரைத் துதிக்கும் புதிய வழியினை தந்துள்ளது. கோயில் கட்டுதல், குளங்கள் தோண்டுதல், விளக்கேற்றுதல், கற்பூரதீபம் ஏற்றுதல், சந்தானம் வழங்குதல், இசைக் கருவிகள் தருதல், இலிங்கத்துக்கு அபிடேகம் செய்தல், கோயில் விழாக்களை நடத்துதல் இறைவனை நாள்தோறும்

தரிசித்தல் முதலியன கோயில் வழிபாட்டில் அடங்கும். இவற்றைச் செய்யும் சிவனடியாரைச் சிவனாகவே மதித்து வணங்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தப்படுகிறது.

"நலமிலாதானை நல்லனேயென்றும் நரைத்த மாந்தரை இளையோனே

குலமிலாதானைக் குலவனே என்று கூறினும் தொகுப்பாரில்லை

புலமெலாம் வெறிகமழும் பூம்புகாரைப் பாடுமின் புலவீர்காள்

அலமராது அமரருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே (தேவாரம். 7-5-69)

சிவன் எல்லாம் தருவான். எனவே மானிடரைப் புகழ்ந்து நலியாதீர் சிவனை வழிபட்டு தேவையைப் பெறுங்கள் என்ற கோட்பாட்டை சுந்தரர் இப்பாடலில் தன் கொள்கையாகவும் கூறியுள்ளார் (ப. 55 - தமிழ் இலக்கிய வரலாறு).

## முடிவுரை

பக்தியே மனிதனை மேம்படுத்தும் என்பதே ஆன்றோர் கருத்தாகும். ஆதனை வலியுறுத்தும் விதமாக முதலாம் நாயன்மார்களான இம்மூவரும் தம் தேவாரப் பதிகங்களில் இறைநெறிகளைக் தமக்கான கொள்கைகளாகவும் பிறருக்கான கோட்பாடுகளாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

## References

Anusuya, V., (2018) Sambandar and Theocratic Sambandar, Tamilachi Pathippagam, Chennai, India
Kanthaiyapillai, N.C., (2016) Sivan, Tamil Development Coroporation, Chennai, India
Renuga, S., (2012) Lord siva in Tamil literature, Mangai Pathippagam, Chennai, India.
Sethupathi, (2006) Religion and Society from a life point of view, Shenba pathippagam, Chennai, India.
Subramaniyapillai, K., (2016), Edited by Saravanan, S., (2018), Religions and Tamil community in Tamil Nadu, Siva Siddantha perumandarm, Chennai, India.
Vellaivaaranar, K., (2011). History of panniru thirumurai, First edition, Edited by K. SIvaramalingam, India Panpattu Ayivu Maiyam, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License